## மாண்புமிகு சார்பு நீதிமன்றம், லால்குடி.

SUB JUDGE'S COURT, LALGUDI
RECEIVED
10 OCT 2022
SHERISTADAR

**O.S.No.** 704 / 2018

R. சுரேஷ்குமார் ... வாதி

/எதிராக/

1. S. சிங்காரவேலன்

2. S. அனுராதா

... பிரதிவாதிகள்

### வாதி (PW-1) தாக்கல் செய்யும் நிரூபண வாக்குமூலம்

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம்,, கண்ணாக்குடி கிராமம், அஞ்சல், மெயின்ரோட்டில் (கீழத்தெரு) என்ற முகவரியில் வசித்துவரும் ராஜமாணிக்கம் மகன் 40 வயதுள்ள R. சுரேஷ்குமார் ஆகிய நான் சத்திய பிரமாணமாய் நிரூபணவாக்குமூலமாக சொல்வது யாதெனில்,

1. நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் எனக்காக இந்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன்.

2.. என்னிடமிருந்து, பிரதிவாதிகள் தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிகோட்டை கிராமம், சாமியய்யா நகரில் வீடு கட்ட பணம் தேவையடுவதாக கூறி பிரதிவாதிகளின் உறவினர் தாமரைச்செல்வவன் மூலமாக அறிமுகமாகி கடந்த 20.10.2012-ம் தேதி ரூ.3,00,000/-(மூன்று லட்சம் ரூபாய்) கடன் ரொக்கம்மாக பணம் வாங்கினார்கள். பிரதிவாதிகள் என்னியிடமிருந்து பெற்ற மேற்படி கடன் அசல் தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.2/-வீதம் (24% வட்டிவீதம்) வட்டிக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டு கடன் பெற்ற அன்றே மேற்படி கடன் தொகையை நான் கேட்கும்பொழுது திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டு பிரதிவாதிகள் எனக்கு ஒரு புரோநோட் எழுதிக்கொடுத்தார்கள். அந்த புரோநோட்டின் அசல் இத்தடன் எனது தரப்பு ஆவணம் 1 ஆக தாக்கல் செய்யப்பட்டுகிறது.

3. நானும், பிரதிவாதிகளின் உறவினரான தாமரைச்செல்வனும் நேரில் சென்று பிரதிவாதிகளிடம் மேற்படி கடன் தொகையையும் அதற்கான வட்டித்தொகையையும் பலமுறை கேட்டதற்க்கு பிரதிவாதிகள் விரைவில் திருப்பி தருவதாக சொல்லிவந்தார்கள். இந்நிலையில் கடந்த 11.09.2015-ம் தேதி பிரதிவாதிகள் இருவரும் மேற்படி புரோநோட் சாட்சியான தாமரைச்செல்வனை அழைத்து கொண்டு எனது வீட்டிற்கு வந்து என்னிடம் ரூ. 25,000/-ம் பணம் கொடுத்து மேற்படி கடன் அசல் தொகையில் வட்டியின் ஒரு பகுதியாக வரவுவைத்து கொள்ளுமாறும் ஆவண சாட்சிகளின் முன்னிலையில் வரவுவைத்து கொடுத்தார்கள். மேற்படி பிராமிஸிரி நோட்டில் (புரோ நோட்டில்) உள்ள சாட்சிகள் முன்னிலையில் வரவுவைத்து கொடுத்தார்கள்.

4. மேற்படி அசல் கடன் தொகையான ரூ.3,00,000/-க்கு கடந்த 20.10.2012-ம் தேதியிலிருந்து கடந்த 11.09.2015-ம் தேதி வரை பிரதிவாதிகளால் கொடுக்கவேண்டிய வட்டிப்பணத்தில் ஒரு பகுதி ரூ.25,000/-ம் புரோ நோட்டில் பிரதிவாதிகளால் செல்லுவைத்து கொடுக்கப்பட்ட தொகைக்கு பிறகு இதுநாள் வரை பிரதிவாதிகள் எனக்கு கடன் அசல் தொகையோ, அதற்கான வட்டித்தொகையோ திருப்பி கொடுக்கவில்லை. நான்

பிரதிவாதிகளிடம் பலமுறை மேற்படி கடன் அசல் தொகையும், அதற்கான வட்டித்தொகையும் சேர்த்து தருமாறு கேட்டும் தருவதாக சொல்லிக்கொண்டு தராமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள். இந்நிலையில் நான் கடந்த 22.09.2017-ம் தேதியன்று பிரதிவாதிகளிடம் மேற்படி கடன் அசல் தொகையும் அதற்கான வட்டித்தொகையும் திருப்பி கொடுக்குமாறு கேட்கும்போது மேற்படி பணத்தை இன்னும் 4 மாதங்களில் திருப்பிதருவதாக சொல்லிக்கொண்டு பிரதிவாதிகள், என்னை ஏமாற்றி வருகிறார்கள் என்பதை தெரிந்துகொண்ட நான் கடந்த 22.11.2017-ம் தேதி பிரதிவாதிகளுக்கு மேற்கண்ட தேதியில் வாங்கிய கடன் அசல் தொகையும் மற்றும் அதற்கான வட்டித்தொகையும் சேர்த்து ஒரு வாரகாலத்திற்குள் என்னிடம் திருப்பி கொடுக்க வேண்டும் என்று நான் ஓர் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் இத்துடன் எனது தரப்பு ஆவணம் 2-ஆக இவ்வழக்குரையுடன் தாக்கல் செய்யப்படுகிறது.

5. எனது வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பை கடந்த 24.11.2017-ம் தேதி 2-ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டுள்ளார். அதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை இத்துடன் எனது தரப்பு ஆவணம் 3- ஆக தாக்கல் செய்யப்படுகிறது. கடந்த 25.11.2017-ம் தேதியன்று 1-ம் பிரதிவாதி மேற்படி எனது வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ள மறுத்து திருப்பி எனது வழக்கறிஞர் முகவரிக்கு திருப்பி அனுப்பியுள்ளார். மேற்படி திருப்பப்பட்ட வழக்றிஞர் அறிவிப்பு பதிவு தபால் உரையுடன் கூடிய அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல் எனது தரப்பு ஆவணம் 4- ஆக தாக்கல் செய்யப்படுகிறது.

6. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்ட 2-ம் பிரதிவாதி கடந்த 15.12.2017-ம் தேதி ஓர் வழக்கறிஞர் மூலமாக எனது வழக்கறிஞருக்கு உண்மைக்கு மாறான பொய்யான சங்கதிகளை கூறி கடந்த 11.09.2015-ம் என்னியிடம் மேற்படி புரோநோட் சாட்சிகள் முன்னிலையில் வட்டிப்பணத்தில் ஒரு பகுதியை ரூ.25,000/ம் மட்டும் வரவுவைத்து கொடுத்துவிட்டு அவரது பதில் அறிவிப்பில் ஒரு வருடத்திற்குறிய வட்டிப்பணம் ரூ.72,000/-ம் என்னிடம் கொடுத்துள்ளதாக ஒரு பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு சொல்லியுள்ளார். சில சங்கதிகளை ஒப்புக்கொண்டும், மேற்படி அசல் தொகையையும், அதற்கான வட்டித்தொகைகளையும் சேர்த்து 6 மாத கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்றும், அதற்குள் 1-ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள பிளாட்டை விற்பனை செய்தும், பிரதிவாதிகளுக்கு சொந்தமான தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிகோட்டை சாமியய்யாநகரில் உள்ள கெட்டிமெத்தை வீட்டை வங்கியில் வீட்டுலோன் போட்டும், தஞ்சாவூரில் பிரதிவாதிகள் நடத்திவரும் ஸ்டார் கேபிள் விசன் ( Star Cable Vision, Thanjauvr ) என்ற நிறுவனத்தால் கிடைக்கும் வருமானத்தை கொண்டும், தஞ்சாவூரில் பிரதிவாதிகள் சொந்தமாக வைத்துள்ள செல்போன் விற்பனை மற்றும் சர்வீஸ் சென்டர் மூலமாக கிடைக்கும் வருமானத்தை கொண்டு விரைவில் கொடுத்துவிடுவதாக சொல்லி கால அவகாசம் வழங்குமாறு என்னியிடம் கோரிகை வைத்து பிரதிவாதிகள் ஓர் பதில் வழக்கறிஞர் அறிவிப்பு எனது வழக்கறிஞருக்கு அனுப்பியுள்ளார்கள். மேற்படி பிரதிவாதிகள் அனுப்பிய பதில் வழ்க்கறிஞர் அறிவிப்பு அசல் எனது தரப்பு ஆவணமாக இந்த வழக்குரையுடன் 5-ஆக தாக்கல் செய்யப்படுகிறது.

7. இந்நிலையில் நான் பிரதிவாதிகளிடம் மேற்படி கடன் அசல் தொகையும் மற்றும் அதற்கான வட்டித்தொகையும் கொடுக்குமாறு கேட்டபோது 1-ம் பிரதிவாதி கடந்த 19.08.2018-

ம் தேதி தஞ்சாவூர் தெற்கு மெயின் தெருவில் உள்ள விஜயா வங்கிக்குரிய தனக்கு சொந்தமான காசோலையில் (காசோலை எண்:A-837557 -ல் ) ரூ. 6,50,000/ என தொகையை குறிப்பிட்டு 20 நாட்களுக்கு பிறகு 1-ம் பிரதிவாதியின் வங்கி கணக்கில் போதிய பணம் இருக்கும் அப்போது மேற்படி காசோலையை கலெக்சனுக்கு போட்டு பணத்தை எடுத்துகொள்ளுமாறும், மேற்படி கடன் தொகையில் எஞ்சியுள்ள தொகையை கணக்கு பார்த்து இன்னும் ஓரிரு மாதத்தில் திருப்பி தருவதாக கூறி வாதியின் பெயருக்கு ஓர் காசோலை கொடுத்தார். 07.09.2018 தேதி மேற்படி 1-ம் பிரதிவாதி கொடுத்த மேற்படி காசோலையை நான் கணக்கு வைத்துள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கொடுத்து கலெக்ஷனில் போட்டேன். மேற்படி காசோலை சம்மந்தமாக தங்களது வங்கியில் போதுமான தொகையிருப்பு உள்ளதா என்று கேட்டபோது இருப்பதாக 1-ம் பிரதிவாதி சொல்லியுள்ளார். மேற்படி காசோலை கலைக்சென் போட்டு 1 வாரம் கழித்துதான் மேற்படி காசோலைக்குறிய முடிவு தெரியவரும். அதற்குள் மேற்படி கடனுக்கான காலக்கெடு முடிவடைந்துவிடும் என்பதால் இந்த காசோலை உடனே தாக்கல் செய்யவேண்டிய அவசியம் எற்பட்டது. மேற்படி காசோலை குறித்து 14.09.2018-ம் தேதி மேற்படி வங்கி மேலாளரிடம் சென்று நான் கேட்டபோது திருச்சி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஜோனல் மேனேஜர் மேற்படி காசோலையானது காலாவதியான காசோலை என்று ஏற்கமறுத்துவிட்டார்.

8. கடந்த 14.09.2018-ம் தேதியன்றே நானும், எனது நண்பரையும் அழைத்து கொண்டு பிரதிவாதிகள் ஊருக்கு சென்று மேற்படி காலாவதியான காசோலையில் ரூ.6,50,000/-ம் என பூர்த்தி செய்து 20 நாட்கள் கழித்து கலெக்சனில் போட்டு பணத்தை எடுத்துகொள்ளுமாறு ஓர் மோசடியான சங்கதிகளை சொல்லி என்னை ஏன் மோசடி செய்து ஏமாற்றினீர்கள் என்று நான் கேட்டதற்கு 1-ம் பிரதிவாதி என்னை பொது இடத்தில் நிற்க்கவைத்து தகாதவார்த்தைகளால் அசிங்கமாக அறுவருக்கதக்க வார்தாவார்த்தைகளால் திட்டியும், வேண்டுமென்றேதான் காலாவதியான செக் என்று தெரிந்துதான் தன்னிடம் பூர்த்தி செய்துகொடுத்தேன் என்றும் உன்னால் என்னை என்ன செய்யமுடியும் என்றும், உன்னால் முடிந்ததை பார்த்துகொள் என்று திட்டினார். 1-ம் பிரதிவாதியின் மனைவி 2-ம் பிரதிவாதியை தேடிபார்த்தோம் அவர் வீட்டில் இல்லை. மேலும் 1-ம் பிரதிவாதி என்னையும் எனது நண்பனையும் அசிங்கமாக திட்டிக்கொண்டு இங்கு ஏன்டா நிற்கிறீங்க ஒழுங்கா ஓடிடுங்க இல்ல எனது நண்பர்கள் எல்லாம் ரவுடி பசங்க கூப்பட்டா போது உங்களை உண்டுயில்லையென்று ஒருகை பார்த்துவிடுவான்க, நான் சொன்னாபோதும் கொன்றுவிடுவார்கள் ஒழுங்கா ஓடிடுங்க. உன்னை ஏமாற்றதான் காலாவதி காசோலையை கொடுத்தேன் இப்ப உன்னால என்னடா செய்யமுடியும், நீ இங்கு நின்னுகிட்டு ஏதாவது பேசுனே கொன்று காணாபிணமாக ஆக்கிவிடுவதாக கொலைமிரட்டல் விட்டார். நானும், எனது நண்பரும் உயிருக்கு பயந்து ஓடிவந்துவிட்டோம். அதன்பிறகு தஞ்சாவூர் தமிழ் பல்கலைகழகம் காவல் நிலையத்தில்1-ம் பிரதிவாதிக்கு எதிராக ஒரு புகார் மனுகொடுத்தேன். அந்த புகார் மனு சம்மந்தமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் மேற்படி காவல்நிலையம் காலம் தாழ்த்தி வந்தது. இந்நிலையில் கடந்த 28.10.2018-ம் தேதி மேற்படி காலாவதியான காசோலை சம்மந்தமான சங்கதிகளை குறிப்பிட்டு நான் ஓர் வழக்கறிஞர் மூலமாக வழக்கிறிஞர் அறிவிப்பு பிரதிவாதிகளுக்கு அனுப்பினேன். மேற்படி அறிவிப்பை பிரதிவாதிகள் கடந்த 02.11.2018-ம் தேதி வாங்கமறுத்து திருப்பி அனுப்பிவிட்டார்கள்.1-ம் பிரதிவாதி அரசியல் பலமும், ஆள் பலமும், ரவுடிகளை வைத்துகொண்டு வலம்வருவதால் மேற்படி போலீஸார்கள் எனது மேற்படி புகார் மனு

சம்மந்தமாக F.I.R போடாமலும், எந்தவிதமான நடவடிக்கையும் இதுனாள்வரை எடுக்காமல் இருந்துவருகிறார்கள்.

9. 1-ம் பிரதிவாதி உண்மைக்கு புறம்பான, இட்டுகட்டிய பொய்யான சங்கதிகளை சொல்லி எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார். 1-ம் பிரதிவாதி எதிர் வழக்குரையில் என்னை யார் என்று தெரியாது என்றும், என்னிடமிருந்து தாவா புரோநோட் கடன் வாங்கவில்லை என்றும், 1-ம் பிரதிவாதிக்கும், 2-ம் பிரதிவாதிக்கும் குடும்ப பிரச்சனையால் தன்னை பழிவாங்க பொய்யாவணம் புனைந்து மோசடியாக வழக்கு தாக்கல் செய்திருப்பதாக கூறியுள்ள சங்கதிகள் உண்மைக்குமாறான பொய்யான சங்கதிகளை கூறி தனது எதிர்வழக்குரையில் கூறியுள்ளார். 2-ம் பிரதிவாதி தனியாக ஓர் எதிர்வழக்குரையை உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கூறியும், ஒரு வருட வட்டியான ரூ.72,000/-ம் வட்டிப்பணம் பிரதிவதிகள் இருவரும் புரோநோட்சாட்சிகள் முன்னிலையில் மேற்கண்ட ரூ.72,000/-ம் வட்டிப்பணம் தொகையை என்னிடம் திருப்பி கொடுத்துவிட்டு தாவா புரோநோட்டில் செல்லுவைத்து கொடுத்துள்ளதாக கூறியும், மேற்படி அசல் கடன் தொகை அதற்கான பாக்கி வட்டித்தொகை சேர்த்து 4 மாதம் கால அவகாசம் கேட்டு சென்றதாகவும், கூறி 2-ம் பிரதிவாதி தனியாக ஓர் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். மேற்படி இரு பிரதிவாதிகளும் ஒன்று சேர்ந்துகொண்டு அவர்களுக்குளுக்கு இடையில் குடும்ப பிரச்சணையிருப்பதாக கூறிகொண்டு என்னிடமிருந்து வாங்கிய மேற்படி அசல் கடன் தொகையையும், அதற்கான வட்டித்தொகைகயையும் திருப்பி என்னிடம் கொடுக்காமல் என்னை ஏமாற்றவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடும் வழக்கை இழுத்தடித்து எனக்கு மன நிம்மதியை சீர்குலைத்தும், துன்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பிரதிவாதிகளின் செயல்கள் இருக்கிறது. பிரதிவாதிகளின் உறவினரான தாமரைச்செல்வனிடம் மேற்படி சங்கதிகளை பல முறை எடுத்து சொல்லியும் அவரும் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக மலுப்பலான பதிலை கூறிவருகிறார். பிரதிவாதிகள், அவரது உறவினர் தாமரைச்செல்வன் ஆகியோர்கள் ஒன்றாக கூட்டுசேர்ந்துகொண்டு எனது தாவா புரோட் கடனை திருப்பி தராமல் ஏமாற்றவேண்டு என்ற கெட்ட எண்ணத்தோடு இருக்கிறார்கள்.

10. எனது தாவா புரோநோட்டின் படி வரவேண்டிய கடன் அசல் தொகை ரூ.3,00,000/-ம் மற்றும் வட்டித்தொகைகளை கேட்டும், பிரதிவாதிகள் பல பொய்யான காரணங்களை கூறி தரமறுத்துவருவதால் கடந்த 20.10.2012 முதல் 06.09.2018 ——ம் தேதி வரை வட்டிப்பணம் ரூ. 4,23,400/-ல் கடந்த 11.09.2015-ம் ரூ. 25,000/-ம் வட்டிப்பணம் வரவுவைத்து கொடுத்த தொகை கழித்து மீதியுள்ள வட்டிப்பணம் ரூ. 3,98,400/-ம் சேர்த்து எனக்கு பிரதிவாதிகள் தாவா தொகை ரூ.6,98,400/-ம் . மேற்படி தொகைகளுக்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் வழக்கு தீர்ப்பு மற்றும் தீர்பாணை ஆகும் நாள் வரை மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.2/-வீதம் (24%) வட்டியுடனும், தீர்ப்பு தேதி முதல் தாவாதொகை செலுத்தும் நாள்வரை பின்னிட்ட வட்டியுடனும் எனக்கு, பிரதிவாதிகள் கொடுக்க உத்தரவிட்டு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்க வேண்டி நான் மாண்புமிகு நீதிமன்றத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே மாண்புமிகு நீதிமன்றம் எனக்கு பிரதிவாதிகள் தாவா புரோநோட் தொகை மற்றும் அதற்கான வட்டித்தொகை ரூ.6,98,400/-ம். மேற்படி தாவா தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் வழக்கு தீர்ப்பு மற்றும் தீர்பாணை ஆகும் நாள் வரை மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.2/-வீதம் (24%) வட்டியுடனும், தீர்ப்பு தேதி முதல் தாவாதொகை செலுத்தும்

நாள்வரை பின்னிட்ட வட்டியுடனும் எனக்கு, பிரதிவாதிகள் கொடுக்க உத்தரவிட்டு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்க வேண்டி நான் மாண்புமிகு நீதிமன்றத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலே கூறப்பட்டவை யாவும் உண்மை
என்று உறுதிகூறி 10.10.2022-ம்தேதி
லால்குடியில் கையெழுத்து செய்தேன்.

MS/No 1555/14

வழக்கறிஞர்.லால்குடி.

SUB JUDGE'S COURT, LALGUDI
RECEIVED
10 OCT 2022
SHERISTADAR

## <u>ஆவணங்கள் பட்டியல் :</u>

1. 20.10.2012-ம் தேதி வாதிக்கு, பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த பிராமிஸ்ரி நோட் (புரோ நோட்) ——அசல்
2. 22.11.2017-ம் தேதி வாதியின் வழக்கறிஞர் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல்
3. 24.11.2017-ம் தேதி வாதியின் வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பினை 2-ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை - அசல்
4. 25.11.2017-ம் தேதி வாதியின் வழக்கறிஞர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை 1-ம் பிரதிவாதி வாங்கமறுத்து திருப்பி அனுப்பப்பட்ட RPAD உரை. - அசல்
5. 15.12.2017-ம் தேதி 2-ம் பிரதிவாதியின் வழக்கறிஞர், வாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் வழக்கறிஞர் அறிவிப்பு அசல்.
6. 11.04.2015 ம் தேதியிட்ட பிரதிவாதிகள் தாவா புரோநோட்டில் எழுதிக் கொடுத்த வரவு [illegible]

வாதி வழக்கறிஞர்.

Fwd. A1 [illegible] 10.10.22